

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 60 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – புரட்டாசி 23 – சனிக்கிழமை 10 அக்டோபர் 2026 – மதுரை 8 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:85 - Issue 60 : Thiruvalluvar Year - 2057 - Purattasi 23 - Saturday 10 October 2026 - Madurai 8 Pages ₹ 5.00

பிறந்தநாள்: தியாகி இமானுவேல் சேகரனாரின் வழியில்

சமத்துவத்தை நிலைநாட்ட உழைப்போம்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து – புகழாரம்!

சென்னை, அக். 10 - தியாகி இமானுவேல் சேகரனாரின் பிறந்தநாளையொட்டி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், ''கழக ஆட்சியில் இமானுவேல் சேகரனாருக்கு மணிமண்டபம் அமைத்து அவரது நினைவைப் போற்றியுள்ளோம்'' எனவும், ''தியாகி இமானுவேல் சேகரனாரின் பிறந்தநாளில் அவரது வழியில் அனைவரும் ஒன்றிணைந்து சமத்துவத்தை நிலைநாட்டிட உழைத்திடுவோம்'' என்றும் புகழாரம் சூட்டியுள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு: -

"சாதி ஒழிப்பிற்காகவும் அனைவரும் சமமாக நடத்தப்படுவதற்கும் போராடிய தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் பிறந்தநாள்.

இந்நாளை அரசு விழாவாகக் கொண்டாடிட ஆணை பிறப்பித்து, இமானுவேல் சேகரனாருக்கு மணிமண்டபமும் அமைத்து அவரது நினைவைப் போற்றியது நமது Dravidian Model அரசு.



ஆங்கிலேயர்களின் ஆதிக்கம், சாதிய ஒடுக்குமுறை ஆகிய இரண்டையும் எதிர்த்துப் பாடுபட்ட இமானுவேல் சேகரனாரின் வழியில் அனைவரும் ஒன்றிணைந்து சமத்துவத்தை நிலைநாட்ட உழைப்போம்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அச்சுறுத்தும் எல்நினோ பாதிப்பு;

சென்னையில் வேகமாகச் சரியும் நிலத்தடி நீர்மட்டம்!

20 அடிக்கும் கீழ் சென்றதால் மக்கள் அதிர்ச்சி!

சென்னை, அக்.10-

எல்நினோ பாதிப்பு அச்சுறுத்த தொடங்கியுள்ள நிலையில், அதன் எதிரொலியாக சென்னையில் நிலத்தடி நீர்மட்டம் வேகமாக சரிந்து வருகிறது. 20 அடிக்கும் கீழ் சென்றதால் மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

"எல் நினோ" நிகழ்வால் உலக வெப்பநிலை அதிகரிப்பு, தீவிர வறட்சி மற்றும் பருவமழை குறைபாடு போன்ற கடுமையான வானிலை மாற்றங்கள் ஏற்படும் என வானிலை ஆய்வாளர்கள் எச்சரித்து வருகின்றனர்.

தமிழ்நாட்டை பொறுத்தவரை, மழைப்பொழிவு வெகுவாக குறையும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். நிலைமை இவ்வாறு இருக்க, 'எல் நினோ' பாதிப்பு இப்போதே சென்னையில் பிரதிபலிக்க தொடங்கி விட்டதாக தெரிகிறது. ஆனால் சென்னையில் இந்தாண்டு போதிய பருவமழை இல்லாதது மற்றும் நிலவி வரும் கடுமையான வெப்பம் காரணத்தால், நகரின் பிரதான குடிநீர் ஏரிகளில் நீர் இருப்பு மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. வெயில் தாக்கம் என்பது அதிகரித்து கொண்டே செல்கிறது.



சென்னை மாநகரின் மாதாந்திர குடிநீர் தேவை தோராயமாக 1 டி.எம்.சி என்ற அளவில் உள்ள நிலையில், தற்போதைய நீர் இருப்பு அடுத்த சில மாத தேவையை மட்டுமே சமாளிக்க போதுமானது உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.

மக்கள் தொகை அதிகரிப்பாலும், சென்னை பெருநகர எல்லை விரிவாக்கத்தாலும், சென்னையின் குடிநீர் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே வருகிறது.

கடந்த 2025ம் ஆண்டில் நிலத்தடி நீர்மட்டம் 19.03 அடியாகவும், 2026ம் ஆண்டில் 20.87 அடியாகவும் குறைந்துள்ளது. அதுமட்டுமல்ல, கடந்த இரு மாதங்களில், அதாவது ஜூன் மாதத்தைவிட ஜூலையில், சென்னை மாநகராட்சியின் 15 மண்டலங்களிலும் நிலத்தடி நீர் வெகுவாக குறைந்துள்ளதாக ஆய்வுகள் தெரிவித்துள்ளது.

இதில் குறிப்பாக மாதவரம், தண்டையார்பேட்டை, திரு.வி.க. நகர், ஆலந்தூர், சோழிங்கநல்லூர் பகுதிகளில் மட்டும் சுமார் 3 அடி வரை குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும், கடந்த ஆண்டு (2025) ஜூலை மாதத்தை விட, இந்தாண்டு (2026) ஜூலை மாதத்தில் ராயபுரம், திருவிக, நகர், அம்பத்தூர், அண்ணா நகர் ஆகிய மண்டலங்களில் 4 முதல் 6 அடி வரை குறைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

அறிவுச் செல்வம் - கழகச் செல்வம் - கருத்துச் செல்வம்

முரசொலி செல்வம் 2 ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று!

'முரசொலி' வளாகத்தில் உள்ள திருவுருவச் சிலைக்கு – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்துகிறார்!

சென்னை, அக்.10

திராவிட இயக்கக் கொள்கைச் சிங்கம் - அறிவுச் செல்வம் - கழகச் செல்வம் - கருத்துச் செல்வம் முரசொலி செல்வம் அவர்களின் இரண்டாமாண்டு நினைவு நாள் (10.10.2026) இன்று!

இந்நாளில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை 'முரசொலி' வளாகத்தில் தாம் நிறுவியுள்ள முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து வணங்குகிறார்! திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்.

அதன் விவரம் வருமாறு:-

பேரறிஞர் அண்ணாவின் அன்பில் திளைத்தவர், முத்தமிழறிஞர் கலைஞரின் நெஞ்சில் நீங்கா இடம்பிடித்தவர், கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உற்ற துணையாக பக்க பலமாக இருந்தவர்; எல்லாவற்றிற்கும் மேலாக கழகத்தின் கேடயமாகத் திகழ்ந்தவர், முரசொலி செல்வம் அவர்கள்.

'முரசொலி'யின் 35 ஆண்டுகால ஆசிரியர்!

முத்தமிழறிஞர் கலைஞரின் மூத்த பிள்ளையான 'முரசொலி'யின் பணிகளைத் தன் தோளில் சுமந்துகொண்டு இளமைப் பருவம் முதலே திறம்படச் செயலாற்றியவர்.



முரசொலியில், தலைவர் கலைஞரின் கைப்பிடித்து நடைபயின்று, கலைஞரின் மனசாட்சியான தன் அண்ணன் முரசொலி மாறன் அவர்களின் வழியில், முரசொலியுடன் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர், முரசொலி செல்வம் அவர்கள்.

நெருக்கடி நிலைக் காலத்தில் தி.மு.கழகமும் முரசொலியும் எதிர்கொண்ட சோதனைகளின் போது தலைவர் கலைஞர் அவர்களுக்கு உற்ற துணையாக இருந்து முரசொலி வேலைகளைத் திறம்படச் செய்வர் முரசொலி செல்வம் அவர்கள்!

'முரசொலி'யின் ஆசிரியர் பொறுப்பையும் ஏற்று, இதழியல் துறையில் தனித்துவமான முத்திரைகளைப் பதித்தவர். இந்திய இதழியல் வரலாற்றில் எந்தப் பத்திரிகையும் எதிர்கொள்ளாத வகையில், அ.தி.மு.க ஆட்சியில் சட்ட மன்றத்தில் கூண்டிலேறி, தன் நெஞ்சுரத்தைக் காட்டியவர். 'கூண்டு கண்டேன்; குதூகலம் கொண்டேன்' என முத்தமிழறிஞரால் பாராட்டப் பெற்றவர் முரசொலி செல்வம். அவர்கள்!



'முரசொலி' வளாகத்தில் முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவச்சிலை!

கழகத் தலைவர் திராவிட நாயகர் அவர்களின் அரசியல் வாழ்வில் துணையாக நிழலாக நின்று வழிகாட்டியதுடன், கழகத்தின் கொள்கை முரசமாக முரசொலியில் 'சிலந்தி' என்ற பெயரில் கட்டுரைகளை எழுதி, அரசியல் எதிரிகளை அதிரவைத்தவர் முரசொலி செல்வம் அவர்கள்!

அந்தோ.. அந்த அறிவுச் செல்வத்தை, கழகச் செல்வத்தை, கருத்துச் செல்வத்தை இயற்கை நம்மிடமிருந்து பிரித்து இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. எந்நாளும் நெஞ்சில் அவர் நினைவுகளை ஏந்தி முரசொலி தன் பயணத்தைத் தொடர்கிறது.

முரசொலி செல்வம் அவர்கள் மறைந்ததை அடுத்து - அவர்கள் வளர்த்த 'முரசொலி'யின் வளாகத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முரசொலி செல்வம் அவர்கள் உருவ மார்பளவுச் சிலையினை நிறுவினார்கள்.

அவரது நினைவுநாளில் இத்திருவுருவச் சிலைக்கு கழகத் தலைவர் அவர்கள் மாலை அணிவித்தும், திருவுருவப் படத்திற்கு மலர் தூவியும் மரியாதை செலுத்தி வருகிறார்கள்.

இன்று (10.10.2026) இரண்டாவது நினைவு நாளில் முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மரியாதை செலுத்திட காலை 10.00 மணியளவில் 'முரசொலி' அலுவலகத்திற்கு கழகத் தலைவர் அவர்கள் வருகை தருகிறார்கள்.

இந்நிகழ்வில் ஒருங்கிணைந்த சென்னை மாவட்டக் கழக நிர்வாகிகளும், முன்னணியினரும், தோழர்களும் பெருந்திரளாகப் பங்கேற்று முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மரியாதை செலுத்துகின்றனர்.